4647763



65052/21

சுருக்கம் (20922)

திருவள்ளூர் மாவட்டம் – சோழவரம் ஊராட்சி ஒன்றியம் – பூதூர் ஊராட்சிமன்றத் தலைவர் திரு.பி.சீனிவாஸ் என்பவர் 17.04.2023 முதல் 16.08.2023 வரையிலான 122 நாட்களுக்கு மருத்துவ சிகிக்சைக்காக வெளிநாடு (அமெரிக்கா) சென்று வருவதற்கு அரசின் அனுமதி வேண்டியது – ஆணை வெளியிடப்படுகிறது.

2 8 APR 2023 சென்னை-600 015

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா.4) துறை

அரசாணை (வாலாயம்) எண். 179 நாள் 15.04.2023.

சோபகிருது, சித்திரை-2

திருவள்ளுவர் ஆண்டு 2054

COMMISSIONER OF RURAL DEVELOPMENT AND PANCHAYAT RAJ 19 APR 2023 CHENNAI - 600 015.

படிக்கப்பட்டவை.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.65052/2021/பரா.1-2, நாள் 03.04.2023.

******

ஆணை:-

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பூதூர் ஊராட்சிமன்றத் தலைவர் திரு.பி.சீனிவாஸ் என்பவருக்கு 17.04.2023 முதல் 16.08.2023 முடிய 122 நாட்களுக்கு மருத்துவ சிகிச்சைக்காக அமெரிக்கா சென்று வர அரசின் அனுமதி கோரி திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது எனவும், அதற்குரிய தீர்மானம் நிறைவேற்றப்பட்ட விவரத்துடன், அரசு விதிமுறைகளுக்குட்பட்டு தனியர் வெளிநாடு பயணம் செல்ல தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 82 (A) –ன்படி அனுமதி வழங்கக் கோரி திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் 2.03.2023 நாளிட்ட கருத்துருவினை பரிந்துரைத்து உரிய அனுமதி வழங்கக் கோரி அரசுக்கு அனுப்பியுள்ளார்.

2. மேலும், மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவின்படி மேற்குறித்த தனியரது வெளிநாடு பயணக் காலத்தில் கிராம ஊராட்சி நிர்வாகத்தினை கவனித்துக்கொள்ளும் பொறுப்பினை பூதூர் ஊராட்சியின் துணைத் தலைவருக்கு வழங்கி இயற்றப்பட்டுள்ள பூதூர் கிராம ஊராட்சிமன்ற (தீர்மான எண்.76, நாள் 30.01.2023) தீர்மானத்தின் அடிப்படையிலும், திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பூதூர் ஊராட்சிமன்றத் தலைவர் திரு.பி.சீனிவாஸ்

என்பவர் 17.04.2023 முதல் 16.08.2023 முடிய 122 நாட்களுக்கு மருத்துவ சிகிச்சைக்காக அமெரிக்கா சென்று வருவதற்கு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 82 (A)ன்படி அரசின் அனுமதி வழங்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994-ஆம் ஆண்டு பிரிவு 82A-ன்படி சிற்றூராட்சியின் தலைவர், துணைத் தலைவர் அல்லது உறுப்பினர் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றமொன்றின் அல்லது மாவட்ட ஊராட்சியொன்றின் தலைமையர், துணைத் தலைமையர் அல்லது உறுப்பினர் பதவியை வகித்து வருகின்ற நபர் எவரும் அரசின் எழுத்து வடிவிலான அனுமதியுடனல்லாமல், அவ்வாறான தமது அலுவலகத் தகுதியில் அயல்நாடு எதற்கும் பயணம் எதனையும் மேற்கொள்ளுதல் கூடாது என குறிப்பிடப்பட்டுள்ளது.

4. எனவ, திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் கருத்துருவின் அடிப்படையிலும், அதன் மீதான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பரிந்துரையின் படியும், திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஊராட்சி ஒன்றியம், பூதூர் ஊராட்சிமன்றத் தலைவர் திரு.பி.சீனிவாஸ் என்பவர் 17.04.2023 முதல் 16.08.2023 வரையிலான 122 நாட்களுக்கு மருத்துவ சிகிச்சைக்காக தனது சொந்த செலவில் வெளிநாடு (அமெரிக்கா) சென்று வருவதற்கு அனுமதி வழங்கலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

**ஆளுநரின் ஆணைப்படி)**

**பெ. அமுதா,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
திரு.பி.சீனிவாஸ்,
பூதூர் ஊராட்சிமன்றத் தலைவர்,
சோழவரம் ஊராட்சி ஒன்றியம்
திருவள்ளூர் மாவட்டம்.
**வழி:** ஊராட்சிகளின் ஆய்வாளர்/மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருவள்ளூர் மாவட்டம்.
ஊராட்சிகளின் ஆய்வாளர்/மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருவள்ளூர் மாவட்டம்.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை-15
இருப்பு கோப்பு /உதிரி நகல்

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

15/4/23.
**பிரிவு அலுவலர்**